முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 10

மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)

# வரலாறு - II

நேரம் :- 3 மணி.

சுட்டெண்: ...............................

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

**பகுதி – I இல் முதலாம் வினா கட்டாயமானது.**

**பகுதி – II இலிருந்து நான்கு வினாக்களையும் பகுதி – III இலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து, மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை அளிக்குக.**

## பகுதி – I

1. (அ) (i) பின்வரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
பராக்கிரம சமுத்திரம், களனி கங்கை, கல்ஓயா, பதவியா குளம், காலதித்த, ஆணையிறவு, மட்டக்களப்பு, அநுராதபுரம், இப்பன் கடுவ, கல்பிடிய, அலுகல்லே, சீகிரியா (12 பு)

(ii) பின்வரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தரப்பட்டுள்ள உலகப் படத்தில் குறித்துப் பெயரிடுக. (06 பு)
பாண்டிச்சேரி, பிலிப்பைன்ஸ் தீவு, வத்திக்கான், அரேபியக்கடல், ஸ்பெயின், பம்பாய்

(ஆ) (i) பின்வரும் A,B,C,D யில் தரப்ட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி எழுதுக.
A – தேவநம்பிய திஸ்ஸ மன்னனின் அமைச்சன்
B – 1ஆம் விஜயபாகு மன்னனுக்கு கூடவே இருந்து பாதுகாப்பு வழங்கிய நபர்
C – 2ஆம் பராக்கிரமபாகுவின் தினசரி நடவடிக்கைகளை உள்ளடக்கிய நூல்
D – யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த அரசர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
(4 பு)

- **பின்வரும் A,B உருக்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

(ii) 1) இவ்வுருவிலுள்ள நபர் யார்?
2) இவர் எவ்வினத்தைச் சேர்ந்தவர்?
3) இவர் அதிக காலம் வாழ்ந்த நாடு எது?
4) இவரால் எழுதப்பட்ட இலக்கிய நூல் எது?
(4 பு)


A

(iii) 1) உருவிலுள்ள தூபி யாது?
2) இத்தூபி நிர்மாணிக்கப்பட்ட இராச்சியம் எது?
3) இதனை அமைத்த மன்னன் யார்?
4) இத்தூபியின் முக்கியத்துவம் யாது?
(4 பு)


B

## பகுதி – II

2. (i) இலங்கை பற்றிய தகவல் அடங்கிய தென்னிந்திய இலக்கிய நூல்கள் மூன்று தருக. (3 பு)

(ii) பின்வரும் மூலாதாரங்களை எழுதிய எழுத்தாளர்களை குறிப்பிடுக.
A – டிமுன்டோ
B – பனாகடுவ செப்பு சாசனம்
C – கல்பொத்த கல்வெட்டு
D – நெசுரலிஸ் ஹிஸ்டோரியா (4 பு)

(iii) இலங்கை வரலாற்றை கட்டியெழுப்புவதில் மகாவம்சத்தின் முக்கியத்துவங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு, விளக்குக. (5 பு)

(iv) வரலாற்றைக் கட்டி எழுப்புவதில் தொல்பொருள் மூலாதாரங்களின் முக்கியத்துவம் பற்றி மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 பு)

3. (i) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக்குகைகள் 3 தருக (3 பு)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கரையோர வெட்டவெளிகள் இரண்டும், மலைநாட்டு வெட்டவெளி வேட்டை நிலங்கள் இரண்டும் தருக. (4 பு)

(iii) வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 பு)

(iv) முன்வரலாற்றுக்காலமானது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வேறுபடுத்தி அறிந்கொள்ள உதவும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 பு)

4. (i) பின்வரும் அரச கோட்பாடு எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்ட மன்னர்களை ஒழுங்கு முறையில் தருக.
A – சக்கரவர்த்தி
B – அலகபய மகாராஜா
C – நரேஸ்வரா (3 பு)

(ii) புராதன இலங்கை சர்வதேச வர்த்தகர்களின் அவதானத்தை ஈர்ப்பதற்குச் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினைத்தருக. (4 பு)

(iii) புராதன இலங்கையில் அரசுரிமை கிட்டிய இரண்டு முறைகளைக்குறிப்பிட்டு விளக்குக. (5 பு)

(iv) 1ஆம் விஜயபாகுவின் முக்கியத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 பு)

5. (i) புராதன இலங்கையில் நாட்டு மக்களின் நலன் கருதி சுகாதார வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொண்ட மன்னர்கள் மூவரைக் குறிப்படுக. (3 பு)

(ii) புராதன இலங்கையில் கிராமத்தை பிரதிநிதித்துவப்படுத்திய கமிக எனப்படுபவரால் ஆற்றிய சேவைகள் நான்கைத் தருக. (4 பு)

(iii) பண்டைய இலங்கையில் காணப்பட்ட கைத்தொழில்கள் இரண்டை உதாரணத்துடன் விளக்குக. (5 பு)

(iv) எமது நாட்டின் பண்டைய நீர்பாசன பொறியியலாளர்கள் நிர்மாணித்த குளமொன்றின் பகுதிகள் மூன்றினைக் குறிப்பிட்டு, விளக்குக. (6 பு)

6. (i) பின்வரும் இராசதானிகளில் ஆட்சி செய்த முதல் மன்னர்களைக் குறிப்பிடுக.

a – யாப்பஹுவ

b – குருநாகல்

c – கோட்டை (3 பு)

(ii) பின்வரும் A,B,C,D என்பவற்றில் தரப்பட்டுள்ள பிரதேச ஆட்சியாளர்கள் அமைத்துக் கொண்ட பாதுகாப்புக் கோட்டைகளை ஒழுங்கு முறையில் தருக.

A – சங்க தளபதி

B – புவனேகபாகு ஆதிபாத

C – சுப தளபதி

D – வன்னி விஜயபாகு (4 பு)

(iii) கம்பளைக்காலத்தில் காணக்கூடிய விசேட பண்புகள் இரண்டினைக்குறிப்பிட்டு, விளக்குக. (5 பு)

(iv) இரண்டாம் நகராக்க காலத்தில் பொருளாதார அமைப்பின் பிரதான பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு, விளக்குக. (6 பு)

7. (i) பின்வரும் நபர்களின் புனைப்பெயர்களை எழுதுக.

A – குசுமாசன தேவி

B – யமசிங்க பண்டார

C – கொணப்பு பண்டார (3 பு)

(ii) பின்வரும் A,B,C,D என்பவற்றுக்கு உரிய விடைகளை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்க.

A – 1ம் இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்த போது உதவி புரிந்த மலையகப் பிரதானி

B – 2ஆம் இராஜசிங்க மன்னனின் இளமைப் பெயர்

C – பிரதானிகளின் கட்டளைகளை பிராந்திய அதிகாரிகளுக்கு கொண்டு சென்றவர்

D – கோறளையில் ஒவ்வொரு குலத்திவர்களுக்கும் பொறுப்பாக இருந்த நபர் (4 பு)

(மகா ஆஸ்தான, கடுபுல்லே, முகாந்திரம், வீரசுந்தர மண்டார, நிகபிடிய பண்டார, விதானைமார்)

(iii) 1ஆம் விமலதர்ம சூரிய மன்னன் எதிர்நோக்கிய சவால்கள் இரண்டினைக்குறிப்பிட்டு, அச்சவால்களை வெற்றி கொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகளையும் குறிப்பிட்டு விளக்குக. (5 பு)

(iv) அரச மாளிகைச் செயற்பாடுகளை நடத்திச் செல்ல நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகள் மூவரைக்குறிப்பிட்டு, அவர்களின் செயற்பாடுகள் பற்றி விளக்குக. (6 பு)

## பகுதி – III

8. (i) a) மறுமலர்ச்சிக்காலத்தில் சித்திரக் கலைகளை உருவாக்கிய மத்திய நிலையம்

b) மறுமலர்ச்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மானிட வாதப்பாடங்கள் 2 தருக. (3 பு)

(ii) பின்வரும் A,B,C,D என்பவற்றில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

A - மெடிசி குடும்பத்தில் லோரேன்ஸோ மெடிசியின் உருவத்தை வரைந்தவர் யார்?

B - விஞ்ஞானத்துறைக்குப் பாரிய பங்களிப்பைச் செய்த நிக்கலஸ் கொபர்னிகஸ் எனப்படுவர் எவ்வாறு போற்றப்பட்டார்?

C - இந்நாட்டின் கரையோரப்பிரதேசத்தில் போர்த்துக்கேயர் அறிமுகம் செய்த சமயம் யாது?

D - திருச்சபையிலுள்ள குறைபாடுகளை விமர்சனத்துக்குள்ளாகிய பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நபர் யார்? (4 பு)

(iii) மறுமலர்ச்சியானது இலங்கை மீது செலுத்திய சமூகபண்பாட்டு மாற்றங்கள் இரண்டினை குறிப்பிட்டு எழுதுக. (5 பு)

(iv) மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட 3 மாற்றங்களை உதாரணங்களுடன் குறிப்பிட்டு விளக்குக. (6 பு)

9. (i) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

a - மறுமலர்ச்சிக் காலத்தில் நாடுகாண் பயணங்களுக்கு ஊக்கமளிக்கப்பட்ட நாடுகள் இரண்டினைத் தருக.

b - முதலில் ஆசியாவுக்கு வருகை தந்த ஐரோப்பிய இனத்தவன் வந்திறங்கிய துறைமுகம் (3 பு)

(ii) பின்வரும் A,B,C,D என்பவற்றில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

A - நோய்கள் ஏற்படுவதற்கான காரணத்தையும் அதற்கான சிகிச்சைகளையும் கண்டுபிடித்தவர் யார்?

B - புவியீர்ப்புச்சக்தியைக் கண்டு பிடித்தவர் யார்?

C - மேற்கிந்திய தீவை கண்டு பிடித்த நபர் யார்?

D - டிவினா கொமிடியா எனும் காவியத்தை எழுதிய நூலாசிரியர் யார்? (4 பு)

(iii) மறுமலர்ச்சி காரணமாக இலங்கை அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு எழுதுக. (5 பு)

(iv) புதிய கடல் வழியைக் கண்டு பிடிக்க உதவிய சாதகமான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 பு)

PAST PAPERS WIKI



WWW.PastPapers.WIKI

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

**History 10 Answers**

**வடமேல் மாகணக் கல்வித் திணைக்களம்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை- 2022**
**வரலாறு**
**தரம் - 10**
**விடைப்பத்திரம்**

## பகுதி - I

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 11 | 2 | 21 | 1 | 31 | 3 |
| 2 | 2 | 12 | 1 | 22 | 2 | 32 | 4 |
| 3 | 1 | 13 | 3 | 23 | 4 | 33 | 1 |
| 4 | 4 | 14 | 2 | 24 | 3 | 34 | 3 |
| 5 | 2 | 15 | 4 | 25 | 2 | 35 | 1 |
| 6 | 4 | 16 | 1 | 26 | 3 | 36 | 3 |
| 7 | 3 | 17 | 3 | 27 | 4 | 37 | 2 |
| 8 | 1 | 18 | 2 | 28 | 1 | 38 | 4 |
| 9 | 3 | 19 | 4 | 29 | 4 | 39 | 3 |
| 10 | 4 | 20 | 3 | 30 | 2 | 40 | 1 |

## பகுதி – II

1. (அ) (i) சரியாக குறிக்கப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக.
   (ii) சரியாக குறிக்கப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக.
   (ஆ) (i) A – அரிட்டன் B – சித்தாரும்பி புத்தநாயக்க
   C – கந்தவுரு சிரித்த D – ஆரியசக்கரவர்த்தி
   (ii) 1) குளோடியல் தொலமி 2) கிரேக்க, உரோம
   3) அலெக்சந்திரியா 4) பூகோள சாஸ்திரப் பிரவேசம்
   (iii) 1) தூபாராம 2) அநுராதபுரம்
   3) தேவநம்பியதிஸ்ஸன் 4) முதலில் நிர்மாணிக்கப்பட்ட தூபி

2. (i) சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு
   (ii) A – அரிஸ்டோடில் B – 1ம் விஜயபாகு
   C – நிஸங்கமல்லன் D – பிளினி (4 புள்ளிகள்)
   (iii) தொடர்ச்சியாக வரலாறு காணப்படல்.
   ✓ மகாவம்சம் எழுதுவதற்கு முன் வேறு நூல் எழுதப்பட்டமை அதிலிருந்து தகவல் பெறப்படல்.
   (iv) இலக்கிய மூலாதாரங்களிலுள்ள தகவல்களை உறுதி செய்ய.
   ✓ உண்மைத்தன்மை காணப்படல்
   ✓ இலக்கிய மூலாதாரங்களில் காணப்படாத பல விடயங்கள் காணப்படல்.

3. (i) கிதுல்கல பெலிலேன, பட்டதொம்பலேன, பாகியங்கல (3 புள்ளிகள்)
   (ii) மினிஹாகல்கந்த, புந்தல, பதிராகவெல (4 புள்ளிகள்)
   ✓ பண்டாரவெல, ஹோட்டன் சமவெளி
   (iii) - வருடாந்த மழைவீழ்ச்சி, இயற்கை வளங்கள்
   - மண்ணின் தன்மை, மழைவீழ்ச்சியின் அளவு (5 புள்ளிகள்)
   (iv) - நிரந்தரக்குடியிருப்பு, விவசாயம் ஆரம்பம், இரும்புலோகம் பாவனை , முறையான மரணச்சடங்கு, மட்பாத்திரப்பாவனை (6 புள்ளிகள்)

4. (i) A – நிஸங்கமல்லன் B – காசியப்ப மன்னன்
C – குட்டகர்ண அபயன் (3 புள்ளிகள்)
(ii) - இந்து சமுத்திரத்திற்கு மத்தியில் அமைந்திருத்தல்
- மாணிக்கம், வாசனைத்திரவியர்கள் காணப்பட்டமை (4 புள்ளிகள்)
(iii) - தந்தையிடமிருந்து மகனுக்கு
- சகோரரமிடந்து சகோதரர்க்கு (5 புள்ளிகள்)
(iv)

5. (i) புத்ததாஸ மன்னன், 5ம் மகிந்தன், 1ம் உபதிஸ்ஸன், 4ம் காசியப்பன் (3 புள்ளிகள்)
(ii) - கிராமத்திலுள்ள பிரச்சிகளைத்தீர்த்தல்
- கிராமக்குளங்களிலிருந்து நீரை வழங்குதல்
- கிராமத்தில் பொதுக்காரியங்களில் ஈடுபடல் (4 புள்ளிகள்)
(iii) இரும்புக்கைத்தொழில், மட்பாண்டக்கைத்தொழில் (5 புள்ளிகள்)
(iv) குளத்தின் பகுதிகள் குளக்கட்டு, கலிங்கல், கலிங்கல் தொட்டி, அலைத்தாங்கி
(6 புள்ளிகள்)

6. (i) a – 1ம் புவனேகபாகு b – 2ஆம் புவனேகபாகு
c – 6ம் விக்ரமபாகு (3 புள்ளிகள்)
(ii) A – மினிப்பே கங்கைக்கரை B – கோவிந்த மலை
C – யாப்பகுவ மலை D – தம்பதெனிய (4 புள்ளிகள்)
(iii) பல்வேறு பிரதேச ஆட்சிகள் :- தெதிகம, ரைகம, அகேஸ்வர பம்பரை
வடக்கில் ஆரியச்சக்கரவர்த்தி பலம் பெறல் (5 புள்ளிகள்)
(iv) வெளிநாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளை பேணுதல்
மழைநீரை நம்பி விவசாயம் மேற்கொள்ளல்
ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் மேற்கொள்ளல் (6 புள்ளிகள்)

7. (i) A – தோனா கதரினா B – தொன் பிலிப்
C – தொன் யுவான்
(ii) A – வீர சுந்தரப ண்டார B – மகா ஆஸ்தான
C – கடுபுல்ல D – முஹாந்திரம்
(iii) - கண்டி இராச்சியம் சட்டரீதியாக பெறல்
- வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்தல்
- வீழ்ச்சியடைந்த பௌத்த மதத்தை எழுச்சி பெறச் செய்தல்
(iv) மஹாவாசல, ரட்டவசம, பத்தே, விகாரதேவாலகம நிருவாகம்

8. (i) a) புளோரன்ஸ்
b) இலக்கியம், வரலாறு, கலை
(ii) A - லொரன்ஸோ மெடிசி B - வானியலின் தந்தை
C - ரோமன் கத்தோலிக்கம் D - இராஸ்மஸ் (4 புள்ளி)
(iii) மேற்கு ஐரோப்பிய நாடுகளின் கட்டக்கலை மற்றும் கல்வி, மேற்குலக சிந்தனை
(5 புள்ளி)
(iv) ஓவியம், கட்டடக்கலை, சிற்பக்கலை போன்றன (6 புள்ளி)

9. (i) a - போர்த்துக்கல், ஸ்பானியா b - கள்ளிக்கோட்டை (3 புள்ளி)
(ii) A - பெரசல்ஸ் B - ஐசாக் நியுற்றன்
C - கிறிஸ்டோபர் கொலம்பஸ்
D - அலகியரிதாந்தே (4 புள்ளி)

PAST PAPERS WIKI



WWW.PastPapers.WIKI

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Provincial Department of Education - NWP**

**தரம் 10**

**மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)**

சுட்டெண்: ..............................

# வரலாறு

**நேரம் :- 1 மணி.**

## பகுதி – I

**கவனிக்க**

- **எல்லா வினாக்கருக்கும் விடை எழுதுக.**
  **இலக்கம் 01- 40 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1,2,3,4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் (x) இடையாளமிடுக.**
- **மிகச்சரியான விடையினைத் தெரிவு செய்க.**

1) தீப வம்சம் பற்றிய மிகச் சரியான கூற்று எது?
   1. கி.பி. 5 - 6 ஆம் நூற்றாண்டு எழுதப்பட்டது.
   2. இலங்கை வரலாறு சம்பந்தமான தொடர்ச்சியான வரலாற்றை அறிந்து கொள்ளலாம்.
   3. உள்நாட்டு மூலாதாரங்களுள் மிகப் பழமையான இலக்கிய மூலாதாரம் ஆகும்.
   4. வேறு மூலாதாரங்களில் கிடைக்கப்பெறாத பல்வேறு விடயங்கள் இதில் அடங்கியுள்ளது.

2) இலங்கையின் கலாசார வளர்ச்சியின் வரலாற்றை காட்டும் உயிரோட்டமான சாட்சி பின்வருவனவற்றுள் எது?
   1. கல்வெட்டுக்கள், கற்பலகை, குளம்
   2. புராதன சித்திரங்கள், சிற்பங்கள், செதுக்கல்
   3. நாணயம் ,சிதைவுகள், தொல்பொருள்
   4. சமய நம்பிக்கை, புராதன நம்பிக்கைகள்

3) இலக்கிய மூலாதாரங்களில் இருந்து தகவல்களை திரட்டும் போது இறந்த காலத்தை சரியாகப் புரிந்து கொள்வதாயின் தர்க்க ரீதியான சிந்தனையுடன் அணுக வேண்டும். காரணம்,
   1. வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்ற சமகாலத்தில் எழுதப்படாது பிந்திய காலத்தில் எழுதப்பட்டுள்ளது.
   2. இலக்கிய மூலாதாரங்களில் உள்ள வரலாற்று தகவல்கள் பெரும்பாலும் உண்மைத் தன்மையற்றதாக காணப்படல்.
   3. வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்ற சமகாலத்தில் எழுதப்பட்டமை.
   4. எழுத்தாளர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளமை.

4) புராதன பிரதேச எல்லைகளை குறிக்கும் அடையாளங்கள் எவை?
   1. குடம் 2.எழுதுகோல் 3. நாயும் காகமும் 4.விசிறி

5) கிபி 12 ஆம் நூற்றாண்டு கால வரலாற்றை அறிய உதவும் எழுத்தாவண மூலாதாரம் எது?
   1. வல்லிபுர பொற்சாசனம்
   2. பனாகட்டுவ செப்பு சாசனம்
   3. கவிசிலுமின
   4. பெரகும்பா சிரித்த

6) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தமது குடியிருப்பு சூழலை அமைத்துக் கொள்வதில் தாக்கம் செலுத்திய காரணி யாது?
1. இயற்கை வளங்களின் பரம்பல்
2. கிராமக்குளங்களின் அமைவிடம்
3. வேட்டையாடக் கூடிய பிரதேசம்
4. வருடாந்த மழைவீழ்ச்சியின் அளவு

7) முன் வரலாற்றுக்கால மக்களிடம் காணப்பட்ட இலட்சணங்களில் ஒன்று
1. இம்மக்கள் பெறப்பட்ட உணவு
2. கல்லாயுத பாவனை
3. நிலையான குடியிருப்பு
4. உலோக பாவனைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படல்

8) பாரிய கற்பாறைகளை ஒன்று சேர்த்து சதுர வடிவில் அமைக்கப்பட்ட கல்லறை மயானம் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசங்கள் முறையே,
1. கல் சொஹன், இப்பன்கடுவ
2. பாகியங்கல, இரணைமடு
3. கித்துள்கல, பெலிலேன
4. மினிஹாகல் கந்த, பொம்பரிப்பு

9) இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள கஹவணு எனும் நாணயம் எவ்வுலோகத்தினால் உருவாக்கப்பட்டது?
1. தங்கம்
2. வெள்ளி
3. செம்பு
4. இரும்பு

10) நிரல் I இல் தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப நிரல் II இல் உள்ளவற்றை இணைக்கும் போது பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| 1) சேனைப்பயிர்ச்செய்கை, செஹென் எனும் பெயரால் குறிப்பிட்டிருத்தல் | A | பனபெடிக |
| 2) வழக்கங்கள் மரபு முறைகள் தொடர்பான அதிகாரி | B | கொரவக்கல் |
| 3) அரச செயலகத்தலைவர் | C | கொதுறுகேனா |
| 4) கிராமத்தலைவர்கள் ஒற்றுமையாகச் செயற்படல் | D | புத்சரண |

1) ABCD 2) BACD 3)CBAD 4) DBCA

11. அனுராதபுர காலத்தின் நகராக்கத்திற்கு நேரடியாக பங்களிப்புச் செய்யாத புராதன துறைமுகம் எது?
1. மா தொட்ட
2. கொடவாய
3. ஜம்பு கோளப்பட்டினம்
4. லங்கா படுன

12) தம்பதெனிய காலத்திற்குரிய இலக்கிய நூல்கள்,
1. ரசவாஹினி, தூபவம்சம்
2. தூபவம்சம், மயுர சந்தேசய
3. மயுர சந்தேசய, திசர சந்தேசய
4. ரசவாஹினி, மயுர சந்தேசய

13) A – கவுடுள்ள வாவி நிர்மாணித்தல்

B – தனது பத்தாவது ஆட்சி வருடத்தில் கிராமங்களுக்கு எல்லைகள் வகுத்தல்

C – தளதா மாளிகையின் பாதுகாப்பிற்காக வேளைக்காரப்படைகளை நியமித்தல்

D – ஜயவாவி நிர்மாணித்தல்

மேற்கூறப்பட்ட விடயங்களுள் பண்டுகாபய மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டவைகள் யாவை?

1. A,B 2. B,C 3. B,D 4. C,D

14) சூட்டகர்ண அபய மன்னன் தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொண்டான்,

1. இந்திரலோகத்தின் மகாராஜா 2. நரேஸ்வரா
3. சக்கரவர்த்தி 4. மின்னேரிய தெய்வம்

15) பாரிய நீர்ப்பரப்பை தாங்கி நிற்கும் வகையில் அமைக்கப்பட்ட குளமொன்றின் பிரிவுகளுள் ஒன்று,

1. அலைத்தாங்கி 2. சுருங்கை 3. கலிங்கல் 4. குளக்கட்டு

16) கீழே தரப்பட்டுள்ள நிரல் I னை நிரல் II உடன் பொருத்தும் போது பெறப்படும் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.

| **நிரல் I** | **நிரல் II** |
|---|---|
| 1) நில அளவீடு | A கரிசை |
| 2) நிறை | B வச |
| 3) நீளம் | C அக்க |
| 4) காலம் | D ரத்தரேனு |

1. ACDB 2. ADBC 3. BCAD 4. CBDA

17) எம்மன்னனது பிறப்பை நினைவு கூருமுகமாக தெடிகம சூதிகர சைத்திய அமைக்கப்பட்டது.

1. 1ம் விஜயபாகு 2. 2ஆம் பராக்கிரமபாகு
3. 1ம் பராக்கிரமபாகு 4. 6ஆம் பராக்கிரமபாகு

18) பின்வரும் வரிகளுள் விவசாயம் சம்பந்தமாக அறவிடப்படும் வரிகளுள் ஒன்று அல்லாதது எது?

A – தக்கபதி B – போஜகபதி C – மதரமஞ்சக்க D – செஹென்வரி

1. A 2. C 3. B 4. D

19) மருத்துவக்குணமுடைய இலைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கஞ்சி எவ்வாறு அழைக்கப்பட்டது?

1. யவாகு 2. காடிப்புளிப்பு 3. அத்சுணு 4. எம்புல்ஹம்பு

20) பின்வரும் நிரல் I இல் உள்ளவற்றை நிரல் II உடன் இணைக்கும் போது பெறப்பட்ட சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1) எருமை, பசு, ஆடு என்பவற்றைக் கொலை செய்வோருக்கு வழங்கப்பட்ட தண்டனை | A வேவெல்கெடிய கல்வெட்டு |
| 2) களவெடுத்தல், கொலை செய்தல் என்பவற்றுக்கு வழங்கப்பட்ட தண்டனை | B ஹோம்பிடிகம கல்வெட்டு |
| 3) வர்த்தகம் சம்பந்தமான சட்டம் | C மிஹிந்தலை கல்வெட்டு |
| 4) உரிய காலத்தில் அறுவடை செய்யத் தவறும் நபர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை | D கொண்டவெட்டுவான் தூண் கல்வெட்டு |

1. ACBD 2. BCAD 3. CABD 4. DCAB

21) அநுராதபுரத்தை திட்டமிட்ட நகரமாக மாற்றிய மன்னன் யார்?
1. பண்டுகாபயன் 2. துட்டகைமுனு 3. வசபன் 4. மகாசேனன்

22) தம்பதெனிய இராச்சியம் பின்வரும் எந்த நிர்வாக எல்லைக்குட்பட்டது?
1. உருகுணை 2. மாயாரட்டை 3. மலையரட்டை 4. பிஹிட்டரட்டை

23) 3ஆம் விஜயபாகு மன்னனின் இரு புதல்வர்களும் யாவர்?
1. பராக்கிரமபாகு, விஜயபாகு 2. மகா அஸ்தான, விஜயபாகு
3. புவனேகுபாகு, விஜயபாகு 4. பராக்கிரமபாகு, புவனேகுபாகு

24) குருநாகல் காலத்தில் 4ஆம் பராக்கிரமபாகு மன்னன் கி.பி. 1302 ஆம் ஆண்டு ஆட்சி செய்தான் என்பது பற்றி கூறப்பட்டுள்ள இலக்கிய மூலாதாரம் எது?
1. சத்தர்ம ரத்னாவலிய
2. யாழ்ப்பாண வைபவ மாலை
3. சரசோதி மாலை
4. தலதா சிரித

- **பின்வரும் A,B,C,Dஎனும் எழுத்துக்களால் தரப்பட்டுள்ள இலக்கிய மூலாதாரங்களை துணையாகக் கொண்டு 25, 26 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

A – சிதத் சங்கராவ B – பாலாவதார C – புது குணாலங்கார
D – தலதா சிரித E – சத்தர்மலங்கரணய

25) தம்பதெனியாக்கலத்தில் எழுதப்பட்ட நூல்கள் எந்த எழுத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளது?
1. A யும் D யும் 2. A யும் E யும்
3. B யும் E யும் 4. C யும் D யும்

26) கம்பளை யுகத்திற்குரிய இலக்கிய நூல்களைக் குறிப்பிடும் எழுத்துக்கள் யாவை?
1. A யும் B யும் 2. B யும் D யும்
3. B யும் C யும் 4. D யும் E யும்

27) போர்த்துக்கேயரின் தலையீடு கண்டி இராச்சியத்தில் காணப்படாமைக்கான காரணம் யாது?
1. யமசிங்க பண்டார ஆட்சி பீடம் ஏறியமை
2. கரலியத்த பண்டார போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்தமை
3. மலையகப் பிரதானிகளின் ஒற்றுமை
4. மலைநாட்டவரின் ஆதரவைப் பெற்று கொணப்பு பண்டார மலையகத்தில் ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்துதல்

28) பின்வரும் நிரல் I உடன் நிரல் II இனை இணைக்கும் போது பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1) கபாடகம் | A பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்படும் |
| 2) நிந்தகம் | B விகாரைகளுக்கு தானம் அளிக்கப்பட்டமை |
| 3) பரவேனிகம | C அரச மாளிகைக்காக பயன்படுத்தப்பட்டமை |
| 4) விகாரகம | D கிராமத்தவர்கள் பரம்பரையாக அனுபவித்தமை |

1. CADB 2. ACBD 3. CBDA 4. DCBA

29) கோள்கள் அனைத்தும் சூரியனைச் சுற்றி நீள்வட்டப்பாதையில் சுற்றிவருவதாகக் கூறிய விஞ்ஞானி யார்?
1. நிக்கலஸ் கொபர்ணிகர்ஸ்
2. ஐசாக் நியுட்டன்
3. கலிலியோ கலிலி
4. ஜொஹன்னர் கெப்லர்

30) போர்த்துக்கேயர் புராதன இலங்கையை எவ்வாறு அழைத்தனர்?
1. தப்ரபேன்
2. சைலான்
3. செரண்டிப்
4. சிங்கள துவீபம்

31) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த போது கோட்டே இராச்சியத்தின் ஆட்சியாளன் யார்?
1. 6ஆம் பராக்கிரமபாகு
2. 7ஆம் புவனேகபாகு
3. 8ஆம் வீரபராக்கிரமபாகு
4. 6ஆம் விஜயபாகு

- **32, 33, 34 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்துக.**

| ஆண்டு | மலையக ஆட்சியாளன் | போர்த்துக்கேய தளபதி |
|---|---|---|
| A 1602 | E 1ஆம் விமலதர்ம சூரியன் | H தொன் ஜெரனிமோத அசபேது |
| B 1630 | F செனரத் | I தியோகுத மெல்லோ |
| C 1598 | G 2ஆம் ராஜசிங்கள் | J ஜெரோலோபேஸ்தசூசா |
| D 1638 | | K கொன்ஸ்தைந்து த ஸா |

32) தந்துரே போர் சம்பந்தமான சரியான விடை யாது?
1. AEK 2. BFH 3. CEK 4. CEJ

33) ரன்தெனிவல போர் சம்பந்தமான சரியான விடை யாது?
1. BFK 2. DFH 3. CGJ 4. BGK

34) கன்னொருவ போர் சம்பந்தமான சரியான விடை யாது?
1. CGJ  2. BEK  3. DGI  4. DFH

- **பின்வரும் A,B கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 35, 36ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A – திருச்சபையில் இருந்த குறைபாடுகள் விமர்சனத்துக்குள்ளாகின.
B – மானிடவாதம் முதன்மை பெற்றது.

35) மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு வெல்வாக்குச் செலுத்திய காரணி,
1. A உண்மை B உண்மையற்றது
2. A யும் B யும் உண்மையானது
3. A உண்மையற்றது என்பதுடன் B உண்மையானது
4. A யும் B யும் உண்மையற்றது

36) மறுமலர்ச்சியின் விளைவுகளில் ஒன்று,
1. A உண்மை B உண்மையற்றது
2. A யும் B யும் உண்மையானது
3. A உண்மையற்றது என்பதுடன் B உண்மையானது
4. A யும் B யும் உண்மையற்றது

- **இங்கு A,B,C,D எனும் நான்கு கருத்துச் சோடிகள் தரப்பட்டுள்ளன. சோடி ஒவ்வொன்றினதும் கருத்துக்கிடையேயான தொடர்புகளை பரிசீலனை செய்து 37 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**

A – 1) சீதாவக்கை இராசதானி
2) அரசன் பின்பற்றிய பௌத்த விரோத கொள்கை
B – 1) பிரதானிகளின் அதிகாரம் வீழ்ச்சியடைதல்
2) மறுமலர்ச்சி
C – 1) தேசிய அரசு தோற்றம்
2) மத்திய வர்க்கத்தினர்
D – 1) போர்த்துக்கேயர்
2) தூரநோக்குக்கருவியை கண்டுபிடித்தல்

37) இரண்டாவது நிகழ்வுக்கு முதலாவது வழிவகுத்தது,
1. A  2. B  3. C  4. D

38) ஒன்றுக்கு ஒன்று எவ்வித தொடர்பும் அற்றது,
1. A  2. B  3. C  4. D

39) முதலாவது சம்பவம் இரண்டாவதற்கு பெறுமதி சேர்க்கும் சோடி,
1. A  2. B  3. C  4. D

40) இரண்டாவது நிகழ்வு முதலாவது வீழ்ச்சிக்கு காரணமான சோடி,
1. A  2. B  3. C  4. D

PAST PAPERS WIKI



WWW.PastPapers.WIKI

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!